(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **99**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 செப்தெம்பர் 09, வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டாற ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்டவிவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினைத் தாபிப்பது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2016 யூன் 29 ஆம் திகதிய 1973/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2016.08.10 அன்றுள்ளவாறு தேசிய வரவு செலவுத்திட்டத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் வரவு செலவுத் திட்ட உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் - 2016 ச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் சபாபீடத்திலிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2. மனுக்கள்:**

(1) கல்கிஸ்ஸ, புனித மேரி மாவத்தை, இல. 39 இல் வதியும் திரு. ரஷீட் கபூரினது 2016.03.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரவீந்திர சமரவீர சமர்ப்பித்தார்.

(2) (i) மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, இல. 525/8 இல் வதியும் திரு ஏ. சிலெஸ்தீன் ரூபனினது 2016.06.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) காத்தான்குடி, கப்ருஆடி வீதியில் வதியும் திரு. எம்.சீ.ஏ. ரஸீடினது 2016.07.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் சமர்ப்பித்தார்.

(3) நீர்கொழும்பு, 3 குறன, மங்கள வீதி, இல. 30 இல் வதியும் திரு. எஸ்.ஈ.ஜே. பர்னாந்துவினது 2016.04.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) (டாக்டர்) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே சமர்ப்பித்தார்.

(4) (i) ராகம, தேவத்த வீதி, இல. 629/167 இல் வதியும் திரு. ஜே.ஜீ. குணதாசவினது 2016.06.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கோணவல (மே.மா.), சப்புகஸ்கந்த வீதி, இல. 612 இல் வதியும் திரு. என்.ஏ. ஜயவர்தனவினது 2016.07.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ துலீப் விஜேசேகர சமர்ப்பித்தார்.

(5) (i) பாணந்துறை, மஹவில, ஆதர்ஷ மாவத்தை, இல. 127 சீ யில் வதியும் திரு. டி.ஆர். தயாவங்ச பெரேராவினது 2016.04.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தொடன்கொட, கல்கெட்டமுல்ல, பஹன்வத்த II, இல. 238/24 இல் வதியும் திரு. ஜே. முனசிங்கவினது 2016.07.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மத்துகம, யட்டதொலவத்தவில் வதியும் திரு. கே.கே. யஸவர்தனவினது 2016.05.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மத்துகம, யட்டதொலவத்தவில் வதியும் திரு. கே.கே. யஸவர்தனவினது 2016.05.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;மற்றும்

(v) மொரட்டுவ, எகொட உயன, மோதர வீதி, இல. 282/1 இல் வதியும் திரு. எம்.எஸ். இப்றாஹிமினது 2016.06.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

(6) கித்துள்கல, தெலிகம, துங்கிந்த, கனேபல்ல வீதி, இல. 27 இல் வதியும் திரு. பீ.வி.சி.பி. சமரசிங்கவினது 2016.08.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த சமர்ப்பித்தார்.

(7) பொத்துவில் - பி/19, பஸரிச்சேனை, அதிகாரி வீதியில் வதியும் திருமதி பி. சபுரா உம்மாவினது 2016.08.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அநுர திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(8) (i) வன்சாவல, களஹே, ஸ்ரீ குணரதன மாவத்தை, பத்தினாவத்தயில் வதியும் திரு. சந்திரசிரி ரணதீரவினது 2016.08.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) நாலவலப்பிட்டிய, கம்பொளை வீதி, இல. 138 இல் வதியும் திருமதி டி.கே. அளுத்கேயினது 2016.07.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ பிமல் ரத்னாயக்க சமர்ப்பித்தார்.

(9) மஹியங்கன, ப/ மஹியங்கனை தேசிய பாடசாலையில் சேவையாற்றும் திரு. சுதந்த ரத்னாயக்கவினது 2016.05.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜயந்த சமரவீர சமர்ப்பித்தார்.

(10) மொனராகல, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு. ஆர்.எம்.எம். தினுஸ அசங்க சந்திரசிரியினது 2016.06.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர சமர்ப்பித்தார்.

(11) பண்டாரகம, அட்டுலுகம, அம்பகஹவத்த, இல. 52/டி யில் வதியும் திருமதி அப்துல் ரசிது பாசிமா ராளியினது 2016.08.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. மருத்துவம் (திருத்தம்):** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சார்பாக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்வதற்கும் அதனை அச்சிடுவதற்கும் மற்றும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அலுவல்கள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அலுவல்கள் (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 156 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 வரையும் மற்றும் பி.ப. 1.30 முதல் பி.ப. 4.00 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பரிஸ் உடன்படிக்கை ஒப்புதலளித்தல்:** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சமர்ப்பித்த பிரேரணை,— 1992 மே மாதம் 09 ஆம் திகதி நியூயோர்க்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலநிலை மாற்றங்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாடு தொடர்பான பாரிஸ் உடன்படிக்கை ஒப்புதலளித்தல் தொடர்பில் 2016.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 12.15 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.16 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

‘‘கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக” என திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.47 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.45 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு :** அவ்வேளை பி.ப. 4.00 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 4.04 மணிக்கு பிரதிச் சபாநாயகர் வினாவின்றி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2016 செப்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.